www.Padasalai.Net www.TrbTnpsc.com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

R.no: 37

## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 15×1=15

1) தமிழ் விடு தூது ________ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது
அ) சிற்றிலக்கியம் ஆ) தொடர்நிலைச் செய்யுள்
இ) புதுக்கவிதை ஈ) தனிப்பாடல்

2) அழியா வனப்பு ஒழியா வனப்பு, சிந்தா மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு
அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

3) "மிசை" என்பதன் எதிர்ச்சொல் என்ன?
அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

4) நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

5) மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

6) பொருந்தாத இணை எது?
அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டி மண்டபம்

7) ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

8) தீரா இடும்பை தருவது எது?
அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
இ) பெருமை, குறுமை ஈ) நாடாமை, பேணாமை

9) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித்தேர்வு
இ) தேசியத் திறனறி கல்வி உதவித்தொகை தேர்வு ஈ) மூன்றும் சரி

10) ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

11) 'வல்லவன் ஏவா வானூர்தி' என்ற அறிவியல் சிந்தனையைக் குறிப்பிடும் நூல்
அ) புறநானூறு ஆ) கலித்தொகை
இ) வைரமுத்து கவிதைகள் ஈ) சீவகசிந்தாமணி

பாடலைப் படித்து பின்வரும் (12, 13, 14, 15) வினாக்களுக்கு விடையளிக்கவும்

வான் உட்கும் வடிநீண் மதில்
மல்லல் மூதூர் வயவேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி

Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
அ) தமிழ்விடுதூது ஆ) தமிழோவியம் இ) புறநானூறு ஈ) பெரியபுராணம்

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) சேக்கிழார் ஆ) குடபுலவியனார்
இ) கவிஞர் தமிழ்ஒளி ஈ) ஈரோடு தமிழன்பன்

14) "மூதூர்" இலக்கணக் குறிப்பு யாது?
அ) தொழிற்பெயர் ஆ) வினைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) வினையாலணையும் பெயர்

15) 'மல்லல்' என்பதன் பொருள் யாது?
அ) அறம் ஆ) வளம் இ) பெரிய ஈ) புகழ்

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:-
(வினா எண்.21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) 4×2=8

16) கண்ணி என்பதன் விளக்கம் யாது?

17) விடைக்கேற்ற வினா அமைக்க:
அ) திருக்குறளை ஆங்கிலத்தில் முதலில் முழுமையாக மொழிபெயர்த்தவர் ஜி.யு.போப்
ஆ) திறன் அட்டைகள் என்பவை குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டனவாகும்.

18) "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?

19) நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

20) ஓரறிவு உயிர்கள் யாவை?

21) "மிகுதியான்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:- 5×2=10

22) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - இத்தொடரின் வகையைச் சுட்டுக

23) மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிறதிராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?

24) அடுத்த தலைமுறைக்குத் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

25) வல்லினம் மிகும் இடங்கள் இரண்டினை எழுதுக.

26) மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) நகமும் சதையும் ஆ) கண்ணும் கருத்தும்

27) கலைச்சொல் அறிவோம்:
அ) Lexicon ஆ) Water Management

28) தொடர்களை மாற்றி உருவாக்குக
அ) பதவியை விட்டு நீக்கினான் - இத்தொடரைத் தன்வினைத் தொடராக மாற்றுக
ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர்
- இத்தொடரைப் பிறவினையாக மாற்றுக

Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:- 2×3=6

29) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

30) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடைத் தருக.

நம் முன்னோரின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்தது. அவர்கள் மரம், செடி, கொடிகளையும் போற்றிக் காத்தனர். கால மாற்றத்தில் இவ்வாழ்வு சிறிது சிறிதாக மறைந்து கொண்டே வருகிறது. மரம் என்பது மனித வாழ்வில் மிகவும் இன்றியமையாதது. மரங்கள் இல்லை என்றால் நமக்கு உயிர்வளி கிடைக்காமல் போய்விடும். அவ்வகையில் பட்டுப்போன மரமொன்று கவிஞர் ஒருவரின் உள்ளத்தில் ஏற்படுத்திய குமுறலை வெளிப்படுத்துகிறது.

அ) மனித வாழ்வில் மிகவும் இன்றியமையாதது எது?
ஆ) மரம் இல்லை என்றால் நமக்கு எது கிடைக்காது?
இ) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு யாது?

31) சோழர் கால குமிழித் தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:-
(வினா எண். 34க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்) 2×3=6

32) பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

33) ஏறுதழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருக்கிறது?

34) "ஒன்றறிவதுவே" எனத் தொடங்கும் தொல்காப்பியரின் பாடல் (அல்லது) "காடெல்லாம்" எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- 2×3=6

35) உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

36) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக

37) துணை வினையின் பண்புகள் யாவை?

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 5×5=25

38) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

39) அடுத்த தலைமுறைக்குத் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

(அல்லது)

அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகளை பற்றி விவரித்து எழுதுக.

Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




40) நயம் பாராட்டுக

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரிகுளங்கள் நிரப்பி வந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்

- கவிமணி

41) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



42) மொழிபெயர்க்க

1) Every flower is a soul blossoming in nature - Gerard De Nerval
2) Sunset is still my favourite colour and rainbow is second - Mattie stepanek
3) An early morning walk is a blessing for the whole day - Henry David Thoreau
4) Just living is not enough ... one must have sunshine freedom and a little flower - Hans christian Anderson
5) The biggest problem is the lack of love and charity - Mother Teresa

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:- **3×8=24**

43) அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க. (அல்லது)

ஆ) 'நீரின்று அமையாது உலகு' - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

44) அ) "தண்ணீர்" கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக. **(அல்லது)**

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

45) அ) உங்கள் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக. (அல்லது)

ஆ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

*******

Padasalai.Net
Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com